## குறு–சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை – தமிழ்நாடு புத்தொழில் –

# புத்தாக்க இயக்கத்தின் சார்பில் - “உலக புத்தொழில் மாநாடு - 2025”

## முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (9.10.2025) தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சார்பில், கோயம்புத்தூர், கொடிசியா வர்த்தக வளாகத்தில் நடைபெற்ற “உலக புத்தொழில் மாநாடு 2025”ல், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், உலகத்தரத்திலான தொழில் வளர்பயிற்சிகளை வழங்குதல் போன்றவற்றிற்காக, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்திற்கும் பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**கோவை, அக்.10–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (9.10.2025) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையைச் சார்ந்த தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சார்பில், கோயம்புத்தூர், கொடிசியா வர்த்தக வளாகத்தில் “உலக புத்தொழில் மாநாடு 2025”–யைத் தொடங்கி வைத்து, தமிழ்நாடு புத்தொழில் சூழமைவு அறிக்கை–2025 (Tamil Nadu Startup EcoSystem Report 2025) மற்றும் “Highlights of Startup Vision Report 2035 for Tamil Nadu” அறிக்கைகளை வெளியிட்டு, தமிழ்நாட்டு புத்தொழில் நிறுவனங்களுக்கு சலுகைத் தொகுப்பு மற்றும் மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர்களுக்கு புத்தொழில் நிதித்திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய அனுமதி ஆணைகளை வழங்கினார்.**

மேலும், முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் மற்றும் பிரான்ஸ், கனடா, ஜெர்மனி உள்ளிட்ட பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**“உலக புத்தொழில் மாநாடு 2025” தொடங்கி வைத்தல்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சார்பில், கோயம்புத்தூர், கொடிசியா வர்த்தக வளாகத்தில், தமிழ்நாட்டின் புத்தொழில் சூழலை உலகத் தரத்தில் மேம்படுத்தும் முயற்சியாகவும், தமிழ்நாட்டின் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்பாளர்களுக்கு பன்னாட்டு இணைப்புகளை ஏற்படுத்தும் வகையிலும் 9.10.2025 மற்றும் 10.10.2025 ஆகிய இரண்டு நாட்கள் “உலக புத்தொழில் மாநாடு 2025” நடைபெறுகிறது.

**தமிழ்நாடு புத்தொழில் சூழமைவு அறிக்கை மற்றும் Vision 2035 - வெளியிடுதல்**

அதனைத் தொடர்ந்து, Inc42 நிறுவனம் தயாரித்த “தமிழ்நாடு புத்தொழில் சூழமைவு அறிக்கை-2025” (Tamil Nadu Startup EcoSystem Report 2025) மற்றும் ஸ்டார்ட் அப் ஜீனோம் அமைப்பு தயாரித்துள்ள “Highlights of Startup Vision Report 2035 for Tamil Nadu” என்ற தொலைநோக்கு அறிக்கைகளின் முதல் நிலை செயல்திட்ட வரைவினை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் வெளியிட்டார்.

**தமிழ்நாட்டு புத்தொழில் நிறுவனங்களுக்கு சலுகைத்தொகுப்பு வழங்குதல்**

பெல்ஜியம் தூதர் திரு.டிடியர் வாண்டர்ஹாஸெல்ட் (Mr. Didier Vanderhasselt) அவர்களால் “Hub.Brussels - My Welcome Package Award” எனும் சலுகைத் தொகுப்பினை இரண்டு தமிழ்நாட்டு புத்தொழில் நிறுவனங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது.

**புத்தொழில் நிதித்திட்டத்தின் கீழ் நிதி வழங்குதல்**

மாற்றுத்திறனாளிகளால் நிறுவப்பட்டுள்ள புத்தொழில் நிறுவனங்களான - 1) மனிதவள மேலாண்மைத் துறையில் இயங்கும் Warpe Academy private limited 2) மிண்ணனுவியல் துறையில் இயங்கும் Ediode Electronics private limited 3) ஆடை விற்பனைத் துறையில் இயங்கும் letsbuysarees நிறுவனம் மற்றும் 4) மதிப்புக் கூட்டப்பட்ட சிறுதானிய உணவுப்பொருட்கள் தயாரிக்கும் Humart நிறுவனம் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்களால் நிறுவப்பட்டுள்ள புத்தொழில் நிறுவனங்களான - 1) நவீன திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கும் Evolvance 2) விவசாயத்துக்கு தேவையான தானியங்கி இயந்திரங்கள் சேவை அளிக்கும் சிவானி ட்ரோன் சர்வீசஸ் நிறுவனம் 3) ஆடை வடிவமைப்பு துறை சார்ந்த Kals apparel 4) உணவு விற்பனை துறையில் இயங்கும் Princess of Trichy refreshments நிறுவனம் ஆகிய எட்டு நிறுவனங்களுக்கு புத்தொழில் நிதித்திட்டத்தின் கீழ், தலா 5 இலட்சம் ரூபாய், என மொத்தம் 40 இலட்சம் ரூபாய்க்கான முழு மானியத்துடன் கூடிய அனுமதி ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், உலகத்தரத்திலான தொழில் வளர்பயிற்சிகளை வழங்குதல் போன்றவற்றிற்காக, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் பிரான்சு நாட்டின் Link Innovations, பிலிப்பைன்ஸ் நாட்டின் Techshake, ஜெர்மனி நாட்டின் Asia Berlin உள்ளிட்ட பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**புத்தொழில் நிறுவனங்களின் கண்காட்சி அரங்குகள்**

இம்மாநாட்டில், தமிழ்நாட்டைச் சார்ந்த புத்தொழில் நிறுவனங்கள், நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்யும் (D2C) பெண் தொழில்முனைவோர்களின் புத்தொழில் நிறுவனங்கள், மாணவர்களின் புத்தாக்க முயற்சிகள், விண்வெளி தொழில்நுட்பத் துறை புத்தொழில் நிறுவனங்கள், மேம்பட்ட உற்பத்தி துறை சார்ந்த தொழில்நுட்ப நிறுவனங்கள் என பல்வேறு நிறுவனங்களால் அமைக்கப்பட்டுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்காட்சி அரங்குகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார். மேலும், தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்களுக்கு பன்னாட்டு சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 21 நாடுகள் பங்கேற்ற பன்னாட்டு அரங்குகளும் இதில் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாநாட்டில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, உகாண்டா நாட்டின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க துறை அமைச்சர் திருமதி மோனிகா முசெனெரோ மசன்சா, சுவிஸ் நாடாளுமன்றத்தின் உறுப்பினர் டாக்டர் நிக்கலஸ் சாமுவேல்குகர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி பி.ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, துபாய் சிலிகான் ஓயாசிஸ் மூத்த துணைத் தலைவர் கானிம் அல்-பலாசி, ஒன்றிய அரசின் மின்துறை, தகவல் தொழில்நுட்பத் துறை செயலாளர் கிருஷ்ணன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், கோயமுத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், ஆசியா பெர்லின் தலைமை நிர்வாக அலுவலர் மார்டன் ராசன்பெர்க், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் நிருவாக இயக்குநர் மற்றும் தலைமை நிருவாக அலுவலர் சிவராஜா ராமநாதன், தமிழ்நாடு FICCI அமைப்பு தலைவர் டாக்டர் ஜி.எஸ்.கே. வேலு, ஏ.பி.டி. இன்டஸ்ட்ரீஸ் செயல் இயக்குநர் சங்கர் வானவராயர், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அரசுப் பிரதிநிதிகள், முன்னணி புத்தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள், புத்தொழில் சூழமைவு செயல்பாட்டாளர்கள், தொழில்முனைவோர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில்

# ‘கலைமாமணி விருது’ - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்!

## சென்னை கலைவாணர் அரங்கில் நாளை விழா!

சென்னை, அக்.10-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாளை 2021, 2022, 2023-ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் மற்றும் சிறப்பு விருதுகளையும் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் கலைமாமணி விருது வழங்கும் விழா நாளை (11.10.2025 - சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகின்றது.

இவ்விழாவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று விருதுகள் வழங்கி, மலர் வெளியிட்டு விழாப் பேருரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் - தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் உறுப்பினர் - செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் 2021, 2022 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதும், சிறப்பு விருதுகளாக பாரதியார் (இயல்) விருது முனைவர் ந.முருகேச பாண்டியன் அவர்களுக்கும், எம்.எஸ்.சுப்புலட்சுமி (இசை) விருது பத்ம விபூஷண் டாக்டர் கே.ஜே.யேசுதாஸ் அவர்களுக்கும், பாலசரஸ்வதி (நாட்டியம்) விருது பத்மஸ்ரீ முத்து கண்ணம்மாள் அவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

இவ்விழாவில் அமைச்சர்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாலை 4 மணிக்கு “உருபாணர்” இசைக் குழுவினரின் யாழ் இசை நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

# கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!



சென்னை, அக். 10-

11.10.2025 அன்று சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி நகரில், வட சென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையம் திறக்கப்படவுள்ளதால் நேற்று (09.10.2025) மீன் வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் நிகழ்ச்சி முன்னேற்பாடு பணிகள் குறித்து நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்ததாவது :

வண்ண மீன்கள் உற்பத்தியாளர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துகின்ற நோக்கிலும், வண்ண மீன் உற்பத்தி தொழில் சார்ந்திருக்கின்ற அன்பிற்கினிய அந்த தொழிலாளர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும், வண்ண மீன்கள் உற்பத்தியில் அந்நிய பொருளாதாரத்தில் பெருமளவு தமிழகத்திற்கு, குறிப்பாக ஒன்றியத்திற்கு கிடைக்கின்ற வகையில், இந்த தொழிலை தமிழகத்தில் இரண்டாவது அதிகமாக வண்ண மீன் உற்பத்தியாளர்கள் உள்ள கொளத்தூர் பகுதியில் முதலமைச்சர் அவர்கள், அவருடைய கனவுத் திட்டமான இந்த திட்டத்தை வண்ண மீன்களுக்கு என்று கொளத்தூரில் வண்ண மீன் உற்பத்தியாளர்களுக்காக தனியாக ஒரு வர்த்தக மையம் அமைக்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்புக்கு ஏற்ப ரூபாய் 53 கோடி செலவில், 184 வண்ண மீன் உற்பத்தியாளர்களுக்கான கடைகள் அமைக்கப்பட்ட வடிவமைப்புடன், சுமார் 4 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த வர்த்தக மையம் அமைந்திருக்கிறது. இதில் கூடுதல் வசதியாக உணவகங்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பிடம், வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம் போன்றவையும் அமைக்கப்பட்டுள்ளது. உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபார நோக்குடன் வருகிறவர்களுக்கு ஏற்ற வகையில் இரண்டு நுழைவாயில்கள் இதில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில், இந்த வர்த்தக மையம் என்பது வண்ண மீன் உற்பத்தியாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

வருகின்ற 11ஆம் தேதி மாலை 6 மணி அளவில், சர்வதேச தரத்தில் அமைத்துள்ள கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையத்தை முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் வண்ண மீன் உற்பத்தியாளர்களிடம் மகிழ்ச்சியுடன் ஒப்படைக்க இருக்கிறார்.

இந்த அரும்பணிக்கு ஊக்கமளிக்க, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி, இந்த மையம் அமைக்க உதவிய மீன்வளத்துறை அமைச்சர் அருமை அண்ணன் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், மீன்வளத் துறையின் செயலாளர் டாக்டர். சுப்பையன் அவர்களுக்கும், எங்கள் துறையின் செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா அவர்களுக்கும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய பிரகாஷ் அவர்களுக்கும், மீன்வளத் துறையின் ஆணையாளர் முரளிதரன் அவர்களுக்கும், எங்கள் துறையின் தலைமை செயல் அலுவலர் சிவஞானம் அவர்களுக்கும், மற்றும் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகளுக்கும், குறிப்பாக இந்த நிகழ்வு அமைவதற்கு முழு ஒத்துழைப்பை வழங்கி வந்த வில்லிவாக்கம் சட்டப்பேரவை உறுப்பினர் அன்பிற்கினிய வெற்றி அழகன் அவர்களுக்கும், மண்டலத் தலைவர் ஜெயின் அவர்களுக்கும், இந்த கட்டமைப்பை உருவாக்கிய அமைச்சர் என்ற வகையில் என் நெஞ்சார்ந்த மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் வெற்றி அழகன், சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் ந.சுப்பையன், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் க.வீ. முரளிதரன், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர்கள் கூ.பீ.ஜெயின், திருமதி.சரிதா மகேஷ்குமார், தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர் ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர் திருமதி.சுதா தீனதயாளன் மற்றும் பல்வேறு துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

## குடிநீர் வாரிய பகுதி அலுவலகங்களில்

# சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில் குறை தீர்க்கும் கூட்டம்!

சென்னை, அக்.10-

சென்னைக் குடிநீர் வாரிய குறை தீர்க்கும் கூட்டம் 11.10.2025 (சனிக்கிழமை) அன்று குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில், குறை தீர்க்கும் கூட்டங்கள் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதத்திற்கான குறை தீர்க்கும் கூட்டம் 11.10.2025 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம்:

பகுதி அலுவலகம்-1 - திருவொற்றியூர், பகுதி அலுவலகம்-2 - மணலி, பகுதி அலுவலகம்-3 - மாதவரம், பகுதி அலுவலகம்-4 - தண்டையார்பேட்டை, பகுதி அலுவலகம்-5 - இராயபுரம், பகுதி அலுவலகம்-6 - திரு. வி.க.நகர், பகுதி அலுவலகம்-7 - அம்பத்தூர், பகுதி அலுவலகம்-8 - அண்ணா நகர், பகுதி அலுவலகம்-9 - தேனாம்பேட்டை, பகுதி அலுவலகம்-10 - கோடம்பாக்கம், பகுதி அலுவலகம்-11 - வளசரவாக்கம், பகுதி அலுவலகம்-12 - ஆலந்தூர், பகுதி அலுவலகம்-13 - அடையாறு, பகுதி அலுவலகம்-14 - பெருங்குடி, பகுதி அலுவலகம்-15 - சோழிங்கநல்லூர்,

இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.



விருகம்பாக்கம் வார்டு 128 வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் – தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து முக்கிய சேவைத்துறை (தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மாநகராட்சி, சுகாதாரம், காவல்துறை, குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், மெட்ரோ நிர்வாகம்) அதிகாரிகளுடனான கலந்தாலோசனைக் கூட்டம்.. 128வது வார்டு மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வட்ட கழக செயலாளர்கள் கோவிந்தராஜன், வி.ஏ.ராஜா கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் ஒன்றியம் திம்ம ராஜாம் பேட்டை ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின். முகாமில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ. பார்வையிட்டு உடனடியாக தீர்வு கண்ட மனுக்கள் பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், வட்டாட்சியர் மோகன்குமார், தேவேந்திரன், பி.சேகர், சஞ்சய்காந்தி, அ.கணேசன், எஸ். அண்ணாதுரை, குமரன், கல்பனா ஆறுமுகம் உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள். உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்